**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் போது கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ஆக ரூபா 12,669,891 கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், நிலையான வைப்பு காலாவதியாவதற்கு முன்னர் மாற்றப்பட்டதன் காரணமாக கிடைத்த வட்டி வருமானம் ரூபா 10,059,248 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மேலதிகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,610,643 வட்டி வருமானம் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் பிற்போட்ட ரீதியில் சீராக்கப்படாமையினால் பெறவேண்டிய வட்டி கணக்கின் மீதி மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பு அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மேலதிகமாக கணக்கீடு செய்யப்பட்ட வட்டி வருமானம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் பிற்போட்ட ரீதியில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆண்டிற்குரிய பணிக்கொடை ஏற்பாட்டை கணிப்பீடு செய்யும் போது ஊழியர்களின் சேவைக் காலம் தொடர்பாக முழுமையான வருடம் ஒன்று பூர்த்தி செய்யப்படாத சந்தர்ப்பத்தின் போது முழுமையான ஒரு வருடத்திற்காக பணிக்கொடை ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக பணிக்கொடை ஏற்பாடுகள் ரூபா 7,146,199 இனால் அதிகரித்தும் பணிக்கொடை மிகை ஒதுக்கீடுகள் அப்பெறுமானத்தால் குறைத்தும், நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சேவைக் காலத்தை விஞ்சாதிருந்த போதிலும், அந்த ஊழியர் ஆண்டின் போது சேவையில் ஈடுபட்டிருந்தார் எனக் கருதப்படல் வேண்டும். அதனால் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் நிதி ஏற்பாடுகள் எதிர்வு கூறப்பட்டுள்ளது. | ஊழியர் சேவையில் இருந்த காலத்திற்காக மாத்திரம் பணிக்கொடை ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 57,438,109 ஆக இருந்த போதிலும், அது ரூபா 55,320,428 ஆக ரூபா 2,117,681 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முதலீட்டை கழிவு செய்யும் போது குறித்துரைத்த வட்டி விகிதத்தினை விட குறைந்த வட்டி விகிதம் ஒன்றை பெற்றதன் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்குரிய குறைவான வட்டி வருமானம் முன்னைய ஆண்டின் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சீராக்கப்படல் வேண்டும். எனினும், அது 2022 ஆம் ஆண்டின் வட்டி வருமானத்தில் சீராக்கப்பட்டதன் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன், அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் மேலதிக நேர செலவினத்திற்கான ஏற்பாடு செய்யப்படாமல் ரூபா 152,601 ஆன மேலதிக நேர செலவினம் மீளாய்வாண்டின் அட்டுறு மேலதிக நேர செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் அட்டுறு செலவின கணக்கின் மீதி அப்பெறுமானத்தால் குறைத்தும், நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடு செய்யப்படாத ரூபா 152,601 ஆன மேலதிக நேர செலவினம் 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அது அட்டுறு மேலதிக நேர செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இந்த தொகை முன்னைய ஆண்டின் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சீராக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அட்டுறு மேலதிக செலவின கணக்கு சமப்படுத்தப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலுத்தப்படாத மேலதிக நேர செலவினத்திற்காக நிதி ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் மற்றும் கணக்காய்வின் கணிப்பின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல்களுக்கு இடையே ரூபா 7,709,862 வேறுபாடும், முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து | உங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பரிந்துரைகளின் பிரகாரம் ஈடுசெய்யும் வகையில் எதிர்காலத்தில் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

உருவான தேறிய காசுப்பாய்ச்சல்களுக்கு இடையே ரூபா 1,932,802 வேறுபாடும், நிதி செயற்பாடுகளில் இருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல்களுக்கு இடையே ரூபா 4,223,417 வேறுபாடும் அவதானிக்கப்பட்டது.

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br><br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| முதலீடு<br>பணிக் கொடை நிதிய முதலீடு | 371,291,985<br>79,344,883 | நிலையான வைப்பு முதலீடு மற்றும் பணிக்கொடை நிதிய முதலீடாக வகைப்படுத்துவதற்குரிய வங்கி உறுதிப்படுத்தல். | அதிகார சபைக்கு கிடைக்கின்ற பணம் வங்கி கணக்கில் சேர்க்கப்படுகின்றது. அவ்வாறு சேகரிக்கப்படுகின்ற பணம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் மிகவும் நலன்வாய்ந்த வட்டி விகிதத்தின் கீழ் அரசாங்க வங்களில் நிலையான வைப்பாக வைப்புச் செய்யப்படுகின்றது. அதில் ஒரு பகுதி நிதிக் கூற்றுக்களில் முதலீடாக குறிப்பிடப்படுகின்றது. ஊழியர் பணிக்கொடை பணத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒதுக்கங்கள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் மிகவும் நலன்வாய்ந்த வட்டி விகித்தின் கீழ் அரச வங்கியில் நிலையான வைப்பாக முதலீடு | வகைப்படுத்தல்களுக்கு உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | செய்யப்படுகின்றது. அந்த முதலீடு பணிக்கொடை நிதிய முதலீடாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலை நீக்கத்திற்கு உட்பட்டதன் கீழ் உள்ள உத்தியோகத்தரிடம் இருந்து அதிகாரசபைக்கு அறவிட வேண்டிய ரூபா 320,942 இடர் கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்படுவதுடன், அந்த மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவரின் இடர் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள பிணையாரிடம் இருந்து அந்த பணத்தை அறவிடுவதற்கோ அல்லது தேவையான சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 84,120,000 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,101,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 77,019,000 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மொத்த வருமானம் ரூபா 92,964,000 இனால் அதிகரித்தமை வழங்கல் மற்றும் பாவனைப் பொருள் செலவினம் மற்றும் உடன்படிக்கை சேவை செலவினங்கள் ரூபா 15,013,000 இனால் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 யூன் 10 ஆம் திகதி வரை காணப்பட்ட நிலையான வைப்பு மீதியில் உயர்ந்த வட்டி விகித்தின் கீழ் மீண்டும் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், ரூபா 14,259,010 பெறுமதியான | கூறுவிலைகள் கோரி சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள ஒன்றிணைந்த தரவு முறைமைக்காக தேவையான பணம் இதன் மூலம் மேவுகை செய்வதற்கும் ஏனைய செலவினத்திற்காக தேவையான | அதிகார சபைக்கு நிதிரீதியான நட்டம் ஏற்படாத வகையில் ஆக்கபூர்வமான முதலீட்டு தீர்மானம் |

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பொன்று அவ்வாறு மீண்டும் முதலீடு செய்யப்படாமையின் காரணமாக அதிகார சபைக்கு ரூபா 1,651,867 நிதிரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது. | பணத்தில் ஒரு பகுதியும் இதன் மூலம் செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்த நிலையான வைப்பு அந்த முறையில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட ஒன்றிணைந்த தரவு முறைமையில் கேள்வி பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டமையாலும் மற்றும் ஆண்டின் இறுதியில் திறைசேரியில் இருந்து ஏனைய செலவினங்களுக்காக நிதி விடுவித்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் இந்த நிலையான வைப்பு கழிவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த சந்தர்ப்பம் வரையிலும் கழிவுடன் மீண்டும் முதலீடு செய்யப்பட்டிருக்குமாயின் வருடாந்த வட்டி விகித்தினை விட குறைவாக இருந்தமையால் அது காலாவதியாகும் வரை வைப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் அதிகார சபை சட்டத்தின் திருத்த நடவடிக்கைகள் 2004 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு சில வருடங்களாக சட்டத்தின் 30 பிரிவுகள் சட்ட வரைவு வழங்கல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இந்த அறிக்கை திகதி வரையிலும் சட்டத்தின் திருத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் புதிய அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2022.07.21 ஆம் திகதிய கடிதம் மூலம் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய 2023.04.18 ஆம் திகதிய அமப23/0771/627/013 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரம் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் திருத்தம் என்ற அமைச்சரவை குறிப்பு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023.05.02 இல் நடைபெற்ற அமைச்சரவை கூட்ட தீர்மானம் 2023.05.09 | சட்ட திருத்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக விரைவாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆம் திகதி அமைச்சருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அமைச்சரவை தீர்மானத்தின் பிரதியொன்று அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், சட்ட வரைவு திணைக்களத்துடன் சட்ட வரைவு திணைக்களத்துடன் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் பொருட்களுக்கு லேபல் இடல் தொடர்பாக ஒரு காலாண்டிற்கு தெளிவுபடுத்தும் 25 நிகழ்ச்சித் திட்டங்கள் வீதம் வருடத்தில் தெளிவுபடுத்தும் 100 நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் ஒரு நிகழ்ச்சித் திட்டமேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆண்டில் விநியோகிக்கப்பட்டுள்ள பல்வேறு இலக்கம் 83, 84 மற்றும் 85 தொடர்பாக வியாபார சமூகத்திற்கு அறிவிப்பதற்காக பணிப்பாளர் (பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்கள்) இனால் சகல மாகாண உதவி பணிப்பாளர்கள் மற்றும் சகல மாவட்ட தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாக அறிவித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் யாவும், மாவட்டத்தை மேவுகை செய்யும் வகையில் நடாத்தப்பட்டுள்ளது. அதையும் உள்ளடக்கி 2022 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட விடயங்களுக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 27 ஆகும். தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தும் போது பயன்படுத்தப்படுகின்ற கணனி மயப்படுத்தப்பட்ட சமர்ப்பித்தல் (presentation) மூலம் இந்த பணிகள் மிகவும் ஆக்கபூர்வமானதாகவும் வினைத்திறனாகவும் மற்றும் குறைந்த கிரயத்துடன், மேற்கொள்ளக் கூடியதாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதுடன், 10 ஆவது பிரிவின் கீழ் | தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடம் போது நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தும் தேவையை சரியாக இனங்காண வேண்டியிருந்ததுடன், திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விநியோகிக்கப்படுகின்ற புதிய ஏற்பாடுகள் தொடர்பாக தனித்தனியாக தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தும் தேவையொன்று காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே விநியோகிக்கப்படுகின்ற புதிய ஏற்பாடு தொடர்பான தகவல்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்ற துண்டுப் பிரசுரங்கள் மூலமும், நுகர்வோர் மற்றும் வியாபார சமூகத்திற்கு தொடர்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே விநியோகிக்கப்படுகின்ற சகல ஏற்பாடுகள் தொடர்பாகவும் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மூலம் தகவல் தொடர்பை ஏற்படுத்தி நடைமுறையில் உள்ள கஷ்டங்களை இனங்கண்டு அதற்கு தீர்வாக QR குறியீடு தரவிறக்கம் செய்வதன் மூலம் புதிய சட்ட விதிகள் தொடர்பாக வியாபார மற்றும் நுகர்வோர் சமூகத்திற்கு இலகுவாக தெளிவுபடுத்துவதற்கான திட்ட முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. | |
| (இ) | சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் தீர்மானிக்கப்படுகின்ற ரூபா ஒரு இலட்சத்தை விஞ்சான வருடாந்த கட்டணம் செலுத்தும் அடிப்படையில் சகல வியாபாரங்களும் அதிகார சபையில் பதிவு செய்ய வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகார சபையினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தக அமைச்சுடன் ஒன்றிணைந்து அமைச்சு மட்டத்தில் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இந்த வியாபாரங்களை பதிவு செய்வதற்காக தேவையான மென்பொருள் மற்றும் தரவு முறையை தயாரிக்கும் முதலாவது கட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நியாயமற்ற வியாபார நடவடிக்கைகளின் காரணமாக தாக்கத்திற்கு உட்பட்ட நுகர்வோர்களுக்கு சலுகை வழங்குவதற்காக நுகர்வோர் அதிகார சபை சட்டத்தின் 13 மற்றும் 32 ஆம் பிரிவுகளின் கீழ் நுகர்வோர் முறைப்பாடு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. உற்பத்தியாளரோ அல்லது வியாபாரியினாலோ வழங்கப்பட்ட அனுமதி பத்திரம் அல்லது பிணை சான்றிதழ் தொடர்பான விடயங்கள் அல்லது ஏனையவைகளுடன் இணங்குகின்ற வகையில் பொருள் விற்பனை செய்தல் அல்லது சேவைகளை வழங்குதல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக அதிகார சபைக்கு விசாரனை செய்ய முடியும். எனினும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மாவட்டங்களுக்கு கிடைத்த முறைப்பாடுகளில் 284 முறைப்பாடுகள் மற்றும் பிரதான அலுவலகத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளில் 1078 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏதாவது முறைப்பாடுகளின் அளவு இறுதி தீர்மானம் வழங்கப்படாத போதிலும், சகல முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள கோவைகளில் 1040 கோவைகளின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 07 கோவைகளின் நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தி செய்வதற்கு உள்ளது. 2022 இற்கு முன்னர் சகல ஆண்டுகளினதும் முறைப்பாடுகள் தொடர்பாக நுகர்வோர் முறைப்பாட்டு அலகு நடவடிக்கை எடுத்து பூர்த்தி செய்துள்ளது. 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மாவட்ட அலுவலகங்களுக்கு இடைத்த பாவனையாளர் சலுகை முறைப்பாடுகளில் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட 284 முறைப்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலைமை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நுகர்வோர் முறைப்பாடுகள் தொடர்பான விரைவாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் நாடு முழுவதும் 23,280 சுற்றிவலைப்புக்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதில் 13,980 சுற்றி வலைப்புக்கள் 60 சதவீதம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொழும்பு, கண்டி, களுத்துரை, காலி, பதுளை, நுவரெலியா போன்ற 06 மாவட்டங்களை இலக்காக கொண்ட | 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப சில மாதங்களில் நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமையின் காரணமாக ஆண்டில் 13,980 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்வதற்கு முடியுமாக இருந்தது. கொழும்பு, கண்டி, களுத்துறை, பதுளை மற்றும் நுவரெலியா என பதுளை மாவட்டத்திற்கு இலக்கை அடைந்துகொள்வதற்கு | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றிவளைப்புக்களில் 50 சதவீதத்திற்கு குறைவான சுற்றிவளைப்புக்களின் அளவே மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேற்கூறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக உத்தியோகத்தர் பற்றாக்குறை வாகன பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தமையும் தாக்கமளித்திருந்தது. | |
| (ஊ) | மீளாய்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தன்மை மற்றும் அந்த பொருட்களுக்குரிய நியமங்களை ஒழுங்குபடுத்துகின்ற நிறுவனங்களுக்கு தொடர்புடைய தரவுகளை உள்ளடக்கி தரவு முறைமையொன்று தயாரித்து அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதற்காக சில நிறுவனங்களில் இருந்து கேள்வி கோரப்பட்ட போதிலும், தொழில்நுட்ப ரீதியில் தகைமை பெற்ற நிறுவனங்களில் இருந்து வழங்கப்பட்ட கூறுவிலைகள் எமது நிறுவனத்திற்கு செய்வற்கு முடியாதிருந்த நிலைமையினால் அந்த தரவு முறைமைகளை தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. | -மேற்படி- |
| (எ) | கணனி சார்ந்த திட்ட முறைமையின் மூலம் அத்தியாவசிய பொருட்களின் நுகர்வோர் விலைகளை மேற்பார்வை செய்வதற்காக ஆண்டில் 40 பொருட்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் மாதிரிகளை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக மாவட்ட உத்தியோகத்தருக்கு தெளிவுபடுத்தும் 04 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டில் ஒரு நிகழ்ச்சித் திட்டமேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்பாடுகள் கணனி மென்பொருளை பயன்படுத்தி கணனி சார்ந்த திட்ட முறைமையை பயன்படுத்தி மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், அந்த கணனி மென்பொருளில் செலவினம் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை விட அதிகமாக இருந்தமையால் அதனை கொள்வனவு செய்யாமையின் காரணமாக அந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், இந்த தேவையான பொருட்களின் நுகர்வோர் விலையை சேகரிக்கும் செயற்பாடுகள் தற்போது சகல மாவட்டங்களையும் மேவுகை செய்யும் வகையில் புலனாய்வு உத்தியோகத்தர்களின் சேவையை பெற்று மேற்கொள்ளப்படுகின்றது. | -மேற்படி- |
| (ஏ) | நுகர்வோர் கல்வி மற்றும் தெளிவுபடுத்தும் நோக்கின் கீழ் | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலை சார்ந்த நுகர்வோர்களுக்கு 50 தாபனங்களை மீளாய்வாண்டில் ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் 7 நுகர்வோர் நிலையங்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. | மற்றும் அரசியல் பின்புலத்தில் பாடசாலைகளில் கற்பித்த கால அட்டவணை சராசரியான செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்ததுடன், விடயங்களுக்கு பொறுப்பான செயற்பாடுகளுக்காக மிகவும் குறைந்த காலமே வழங்கப்பட்டிருந்தது. பாடசாலைகளில் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றமையால் அவ்வாறான நிலைமையொன்றில் வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. | |
| (ஐ) | மீள் - போட்டி நிலைமை மற்றும் நியாயமற்ற வியாபாரிகளின் உற்பத்திகள் மற்றும் வியாபாரிகளை பாதுகாக்கும் நோக்கில் அரசாங்க மற்றும் தனியார் கலந்துரையாடல் ஒன்றை (Public and Private Dialogue) நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணைய தளம் ஊடாக விற்பனை செய்யப்படுகின்ற வியாபாரிகளின் மேற்கொள்ளப்படுகின்ற நியாயமற்ற வியாபாரங்களை முறையாக குறைப்பதற்காக அதிகார சபையால் 2020 ஆம் ஆண்டின் போது இந்த வியாபாரிகளுக்கு தெளிவுபடுத்துவதற்கான வழிகாட்டி கோவையொன்று தயாரித்து 2021 யூன் 30, 2022 மே 15 மற்றும் 2022 ஒக்டோபர் 19 ஆம் திகதியில் அரச மற்றும் தனியார் கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்தது. அந்த கலந்துரையாடல்களின் விளைவாக தற்போது வரையில் இணைய தளம் ஊடாக வியாபாரத்தை மேற்கொள்கின்ற வியாபாரிகளை ஒழுங்குபடுத்துவதற்காக அதிகார சபையினால் கட்டளைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. | வியாபாரிகளை பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற கலந்துரையாடல் திட்டங்கள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஒ) | ஒவ்வொரு மாவட்ட தலைவர்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ள உழைக்கப்பட்ட தொகையில் | இந்த உழைக்கப்பட்ட பணத்தை தீர்த்து வைத்தல் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன், | தீர்த்து வைக்கப்படாத உழைக்கப்பட்ட பணத்தை விரைவாக அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 160,526 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன், அந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டின் இறுதி வரையில் அந்த பணத்தை மீளளிப்பு செய்து தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | பாதுகாப்பற்ற மற்றும் நிலைமையில் தரத்தில் குறைந்த உற்பத்திகளில் இருந்து நுகர்வோரை பாதுகாத்துக் கொள்ளும் நோக்காக் கொண்டு அதிகார சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சில உற்பத்திகளுக்காக பாதுகாப்பு திட்ட முறைமையொன்றை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக சுவிட்சர்லாந்தின் Sicpa Security Solution SA கம்பனியுடன் 2014 சனவரி மாதம் 24 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக அதிகார சபையினால் 2014 பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி இலக்கம் 1851/1 என்ற வர்த்தமானி பத்திரத்தின் மூலம் இலக்கம் 49 ஆவது ஏற்பாடு விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட ஏற்பாட்டு இலக்கம் 49 ஐ வலுவிழக்கச் செய்வதற்காக பொருட்கள் உற்பத்தி கம்பனி சிலவற்றினால் அதிகார சபைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்று கோரிக்கையொன்று கோவையிடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் ஏற்பாட்டு இலக்கம் 49 இன் செயற்படு நிலை உயர் நீதிமன்றத்தால் தடுக்கும் வகையில் இடைக்கால தடை விநியோகித்தன் காரணமாக Sicpa Security Solution SA கம்பனியுடன் உடன்படிக்கை | ஏற்பாட்டு இலக்கம் 49 வலுவிழக்கச் செய்வதற்கும் மற்றும் மேலும் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு நுகர்வோர அலுவல்கள் அதிகார சபைக்கு எதிராக கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் எதிர்காலத்தில் உற்பத்தி கம்பனியால் இலக்கம் 281/14 writ என்ற வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த கோரிக்கையை கவனத்தில் கொண்டு மேன் முறையீட்டு நீதிமன்றத்தால் வழக்கு விசாரனையை முடிவுருத்தி இறுதி தீர்ப்பு வழங்கும் வரை ஏற்பாட்டு இலக்கம் 49 இன் செயற்படு நிலைமையை தடுக்கும் உப கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் பாவனையாளர் அதிகார சபைக்கு SICPA SECURITY SOLUTION SA கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்கு முடியாதிருந்தது. உடன்படிக்கைக்கு இணங்க செயற்திட்ட நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்காக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் நடவடிக்கை எடுத்தமையால் 281/14 writ என்ற வழக்கிற்கு உரிய உப இடைக்கால கட்டளையின் பிரகாரம் உடன்படிக்கையின் முழுமையான நிபந்தனைகள் நுகர்வோர் அலுவல்கள் | அமுல்படுத்தும் இயலுமையை உறுதிப்படுத்தியதன் பின்னர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கைச்சாத்திடுவதற்கு இணங்க செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கு அதிகார சபைக்கு முடியாதிருந்தது. உடன்படிக்கை அமுல்படுத்தப்படாமையின் காரணமாக Sicpa Security Solution SA கம்பனியால் ஒரு தரப்பாக உடன்படிக்கை இரத்துச் செய்து உடன்படிக்கையின் 3.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் மொத்த முழுமையான முதலீட்டு தொகையான ரூபா 2.716 பில்லியன் தொகையான இழப்பினை செலுத்துமாறு கோரி 2018 யூலை 30 ஆம் திகதி சர்வதேச பிணக்குகள் தீர்க்கும் நீதிமன்றத்தில் (International Chamber of Commerce) பிணக்கு தீர்க்கும் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. அதன் இறுதி கையளித்தல் 2022 மே 10 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபையால் Sicpa Security Solution SA கம்பனிக்கு ரூபா 2.716 பில்லியன் தொகையும் அ.டொலர் 325,000 தொகை பிணக்குகள் தீர்க்கும் கட்டணமாகவும் செலுத்த வேண்டிய ஏற்பட்டிருந்தது. எனினும், இந்த செயற்திட்டம் தொடர்பாக வெளிநாட்டு கம்பனியுடன் உடன்படிக்கை செய்வதற்கு முன்னர் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் இயலுமை தொடர்பாக உரிய பொருள் உற்பத்தி கம்பனியை அடிப்படையாக கொண்டு சாத்தியவள ஆய்வு மேற்கொண்டமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. பிணக்குகள் தீர்க்கும் வழக்கின் இறுதி தீர்ப்புக்கு எதிராக அதிகார சபையால் கொழும்பு அதிகார சபையால் மேற்கொள்வதற்கு முடியாமையின் அடிப்படையில் SICPA SECURITY SOLUTION SA கம்பனியினால் ஒரு தரப்பாக உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது. SICPA SECURITY SOLUTION SA கம்பனியால் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் இந்த பிரச்சினைகள் தொடர்பாக சர்வதேச பிணக்குகள் தீர்க்கும் நீதிமன்றத்தில் பிணக்குகள் தீர்க்கும் வழக்கு நடவடிக்கைகள் 2018.07.30 ஆம் திகதி தொடரப்பட்டிருந்தது. 2022.05.10 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட பிணக்குகள் தீர்க்கும் வழக்கின் இறுதி தீர்ப்புக்கு எதிராக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் 2022.07.07 ஆம் திகதி கொழும்பு வணிக நீதிமன்றத்தில் இலக்கம் CHC/626/22/ARB இன் கீழ் முறைப்பாடொன்று கோவையிடப்பட்டிருந்தது. அந்த வழக்கிற்கு பிரதிவாதியாக SICPA SECURITY SOLUTION SA நிறுவனம் சமூகமளிக்காமைக்காக 2023.07.24 கௌரவ நீதிமன்றத்திற்கு அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அந்த வழக்கிற்காக சட்டமா அதிபர் திணைக்களமும் தோன்றியிருந்ததை அறியத்தருகின்றோம்.

நீதிமன்றத்தில் 2022 யூலை 07 ஆம் திகதி CHC/626/22/ARB ஆம் இலக்க முறைப்பாடொன்று கோவையிடப்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நுகர்வோர் பிரச்சினைகளை விரைவாக சமர்ப்பித்தல் மற்றும் நுகர்வோர்களுக்கு சந்தை விலையை அறிந்து கொள்வதற்காக 2015 ஆம் ஆண்டின் போதும் 1977 ஆம் இலக்க நுகர்வோர் விசாரணை சேவை (1977 Interactive Mobile Service) மென்பொருளுக்காக அதிகார சபையால் ரூபா 5,401,428 மற்றும் இந்த செயற்திட்டத்தை மக்களுக்கு விளம்பரப்படுத்துவதற்காக ரூபா 3,786,942 செலவிடப்பட்டிருந்தது. எனினும், தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகள் எழுந்தமை மற்றும் பொருட்களின் விலைகள் நாளதுவரையாக்கப்படாமை, சகல மாவட்ட அலுவலகங்களுடனும் தொடர்புபட்டு தரவுகளை உள்ளடக்குவதற்கு முடியுமான வகையில் முறைமையொன்றை ஏற்படுத்தாமை, முறைப்பாட்டாளர்களுக்கு குறுந்தகவல்கள் மூலம் இணைய வழி ஊடாக முறைப்பாட்டின் இலக்கம் மற்றும் விசாரணைகளின் செயல்முன்னேற்றத்தை தெரிவிப்பதற்கான முறைமை தயாரிக்காமை போன்ற நலிவுகளின் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனங்களுடன் அதிகார சபை உடன்படிக்கை 2014.01.20 ஆம் திகதி முதல் கைச்சாத்திட்டிருந்ததுடன், ஆரம்பமாக ஐந்து வருடங்களுகாக அது இருந்ததுடன், அதன் பின்னர் உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 1977 குறுந்தொலைபேசி இலக்கம் (நுகர்வோரர் முறைப்பாட்டை பெற்றுக் கொள்வதற்காக தற்போதும் வெற்றிகரமாக பயன்படுத்தப்படுகின்றது. முறைப்பாட்டாளருக்கு விசாரணையின் செயல் முன்னேற்தை தெளிவுபடுத்துவதற்காக குறித்த செயற்திட்டத்தையும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக எதிர்பர்ரக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றாதிருந்த செயற்திட்டத்தை ஏற்றுக் கொள்கின்றோம். இதற்காக உரிய ரீதியில் தற்போதைய பொருளாதார, சமூக தேவைகளை இனங்காணல் மற்றும் பாவனையாளர் அதிகார சபை சட்டத்தின் நோக்கங்களை மிகவும் உயர் மட்டத்தில் எதிர்கால தேவைகளை இனங்கண்டு நுகர்வோர் திருப்தியை உயர்மட்டத்தில் வழங்குவதற்காக சகல தொடர்புடையவர்களையும் இணைத்து புதிய | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மென்பொருளொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது திட்டமிடப்படுகின்றது. | |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையினால் ரூபா 200,000 கிரயம் ஆன இருப்பு முகாமைத்துவ மென்பொருளொன்று ரூபா 250,000 கிரயம் ஆன தண்டப் பணம் மற்றும் உழைக்கப்பட்ட பணம் முகாமைத்துவ மென்பொருள் முறைமை மற்றும் ரூபா 54,000 கிரயமான சொத்துக்கள் முகாமைத்துவ மென்பொருள் என்பன 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த மென்பொருள் இந்த அறிக்கை திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உழைக்கப்பட்ட பணம் மற்றும் ஏனைய முறைமைகள் தொடர்பாக ஊழியர்களை பயிற்சி அளித்தலும், மேலதிக வேலை நடவடிக்கைகளும் செய்யப்பட்டிருந்ததுடன், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்காக முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (MIS) ஸ்தாபிப்பதற்கு தற்போது அதற்கான நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளது. தற்போது அரைவாசியாக அமுல்படுத்தப்படுகின்ற மென்பொருளும் அந்த முறைமையில் உள்ளடக்கும் இயலுமை தொடர்பாக தகவல் தொழில்நுட்ப நிபுணர்களிடம் விசாரிக்கப்பட்டதன் பின்னர் அவர்களினால் அந்த மென்பொருள் ஒன்றிணைக்கக் கூடியதாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த மென்பொருள் முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் ஒன்றிணைத்து பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது வரை இந்த மென்பொருளில் இருந்து இருப்பு முகாமைத்துவம் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ மென்பொருள்களின் அடிப்படை தகவல்களை | விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை இலக்கிடப்பட்ட நோக்கங்களில் செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நாளதுவரையாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினரில் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் 02 பணிப்பாளர் பதவிகள், 06 உதவி பணிப்பாளர் பதவிகள், 05 சட்டம் மற்றும் வலுப்படுத்தல் உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 100 விசாரணை உத்தியோகத்தர் பதவிகள் என்பன வெற்றிடமாக காணப்பட்டதால் சட்டத்தின் பிரதான நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றுவது தொடர்பில் உத்தியோகத்தர்கள் வெற்றிடம் பாதகமானதாக தாக்கமளித்திருந்தது. | வரிசை அமைச்சின் செயலாளர் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. உதவி பணிப்பாளர் (பிரதேச அலுவல்கள்) 06 பதவிகளுக்காக 2023.05.02 ஆம் திகதி முதல் அந்த பதவிகளின் கடமைகளை மேவுகை செய்வதற்காக 06 சிரேஷ்ட விசாரணை உத்தியோகத்தக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் வெற்றிடமாக காணப்படுகின்ற பணிப்பாளர் (சட்டம் மற்றும் வலுப்படுத்தல்) பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தரை சேர்த்துக் கொள்வதற்காக 2023.05.25 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், வரிசை அமைச்சினதும் லங்கா சதொச நிறுவனத்தினதும் சட்ட ஆலோசகர் அந்த பதவியின் கடமைகளுக்காக அவசர சேவைகளை நிறைவேற்றும் அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். சட்டம் மற்றும் வலுப்படுத்தல் உத்தியோகத்தரின் 05 பதவிகளுக்காக தற்போது 05 சட்டத்தரணிகள் நியமிக்கப்பட்டு அந்த வெற்றிடத்தை நிரந்தரமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவையான பதவி வெற்றிடங்களை நிரப்பி சட்டத்தின் பிரதான நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |